“ படி! கற்பி ! புரட்சி செய்! உலகம் உன்னைத் திரும்பிப் பார்க்கும்.”

# சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்
## வாராந்தப் பாடசாலை
## வாரம் 01- அலகு 22 கனவளவும் கொள்ளளவும்

தரம் 08

தயாரிப்பு :- எம்பிலிபிட்டிய கல்வி வலயம்

பெயர் :- ..................

பாடம் :- கணிதம்

**கீழே காட்டப்பட்டுள்ள பயிற்சிகளைச் செய்வதற்காக அலகு 22 கனவளவும் கொள்ளளவும் எனும் பாடப்பரப்பின் மீது கவனத்தைச் செலுத்தவும்.**


(கீழுள்ள பயிற்சிகளைச் செய்வதற்காக பாடப்புத்தகத்தில் பகுதி II இல் பக்கம் 90 இல் உள்ள உதாரணம் 1 ஐ அவதானிக்கவும்.)

1. அருகில் காட்டப்பட்டுள்ள கனவுருவினை அவதானித்து அதன் கனவளவிற்கான கோவையை உருவாக்குக.

   கனவுருவின் கனவளவு :- நீளம் × அகலம் × உயரம்

   :- ... × ... × ...

   :- ............




2. சதுரமுகியொன்றின் ஒருபக்கத்தின் நீளம் 8cm எனின், அதன் கனவளவைக் காண்க.


3. கனவுருவொன்றின் அடியின் பரப்பளவு $150cm^2$ ஆகும். அதன் உயரம் 7cm எனின்,அதன் கனவளவைக் காண்க.

4. அடியின் பரப்பளவு $144cm^2$ ஆகவுள்ள சதுரமுகியின்,

   I. ஒரு பக்க நீளம்

   II. கனவளவு என்பவற்றைக் காண்க.

5. கனவளவு $1000cm^3$ ஆகவுள்ள சதுரமுகியொன்றின் ஒரு பக்க நீளத்தைக் காண்க.

6. 


   அருகில் காட்டப்பட்டுள்ள கனவுருவில் பக்கநீளம் 5cm ஆகவுள்ள எத்தனை சதுரமுகிகளை அடுக்க முடியும்?


7. ஒருபக்க நீளம் 30cm ஆகவுள்ள சதுரமுகி வடிவான காட்போட் பெட்டியொன்றில் அடுக்க்கூடிய நீளம், அகலம், உயரம் என்பன முறையே 8cm, 5cm, 2cm ஆகவுள்ள சவர்க்காரங்களின் உயர்ந்தபட்ச எண்ணிக்கையைக் காண்க.

8. கனவளவு $24cm^3$ ஆகவுள்ள 60 சதுரமுகிகளைக் கொண்டு ஆக்கத்தக்க 3 கனவுருவின் நீளம், அகலம், உயரம் என்பவற்றைத் தருக.

9. நீளம், அகலம், உயரம் என்பன முறையே 20cm, 10cm, 9cm ஆகவுள்ள கனவுரு வடிவான உலோகத் திண்மமொன்றை உலோகம் உருகாதவாறு உருக்கி பக்க நீளம6cm ஆகவுள்ள எத்தனை சதுரமுகிகளைச் செய்ய முடியும்?

10. சிந்திக்க !!!!

    அருகில் காட்டப்பட்டுள்ள அமைப்பில் எத்தனை சதுரமுகிகள் காணப்படுகின்றன????





(கீழுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன் பாடப்புத்தகம் பகுதி ஐஐ இல் பக்கம் 92 இல் உள்ள **கொள்ளளவு** என்றப் பகுதியை வாசித்து கிரகிக்கவும். அத்துடன் பக்கம் 94 இலுள்ள உதாரணம் 01, உதாரணம் 02 ஐப் பார்க்கவும்.)


11. கொள்ளளவு என்பதால் நீர் யாது விளங்கிக் கொண்டீர்?

12. கொள்ளளவு பற்றிய அறிவைக் கொண்டு கீழுள்ள இடைவெளிகளை நிரப்பவும்.
    I. $1cm^3$ = ……..m*l*
    II. $1m^3$ = ……...*l*
    II. 1*l* =………m*l*

13. 15*l* கொள்ளளவுள்ள பால் சேகரிக்கும் பாத்திரமொன்றில் 5*l* பால் உள்ளது. மேலும் அப்பாத்திரத்தினுள் 6*l* 750m*l* பால் ஊற்றப்பட்டது. தற்போது பாத்திரத்தில் உள்ள பாலின் அளவைக் காண்க.


14. 600m*l* கொள்ளவைக் கொண்ட மருந்துப் போத்தலில் இருந்து 15m*l* கொள்ளளவுடைய மருந்தேற்றும் ஊசியினூடாக எத்தனை பேருக்கு மருந்தேற்ற முடியும்?

15. அருகில் காட்டப்பட்டிருப்பது அடிப்பரப்பளவு $500cm^2$ ஆகவுள்ள கனவுரு வடிவ எரிபொருள் தாங்கியாகும். இதில் சேகரிக்கக் கூடிய எரிபொருளின் உச்ச பட்ச அளவைக் காண்க.




16. கார்த்திகைத் தீப விளக்கீடின் போது கோயிலில் 1000 விள்க்குகளை ஏற்ற வேண்டும். ஒரு விளக்கிற்கு 50ml எண்ணெய் தேவைப்படுகின்றது. 1*l* எண்ணெயின் விலை ரூ 400 எனின் விளக்குகளை ஒளிர விடத் எண்ணெய் வாங்குவதற்காக செலவழிக்க வேண்டிய தொகையைக் காண்க.

17.




அருகில் காட்டப்பட்டிருப்பது கவிதாவின் வீட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தாங்கியாகும். இதனை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

I. நீர்த்தாங்கியில் முற்றாக நிரப்பக் கூடிய நீரின் அளவை *l*, m*l* என்பவற்றில் காண்க.

II. இந் நீர்த்தாங்கியிலுள்ள நீரில் 1250*l* நீர் வீட்டுத் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டது. எனின், தற்போது தாங்கியில் எஞ்சியுள்ள நீரின் அளவைக் காண்க.

III. வீட்டிலுள்ள சிறுமி 200m*l* கொள்ளளவு கொண்ட சிறிய பாத்திரத்தைப் பயன்படுத்தி குழாயில் நீரைப் பிடித்து முற்றாக நிரப்பி தாங்கியினுள் ஊற்றினாள். இவ்வாறு 15 தடவை நீரை ஊற்றினால் தற்போது தாங்கியில் உள்ள நீரின் அளவைக் காண்க.

**மேலதிக தெளிவுகளுக்கு**

**https://drive.google.com/drive/folders/1C80jwLtTMnY7oNipRz_LDnby6ef0mARR?sort=13&direction=a**